செ.வெ. எண். 687 நாள். 25.10.2007

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (25.10.2007) சென்னை அரசு பொதுமருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனைக்கும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் சென்று அவசர சிகிச்சைப்பிரிவு, உள்நோயாளி பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டு மருத்துவமனையை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதின் அவசியம் குறித்தும், நோயாளிகட்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டியதின் அவசியம் குறித்தும் வலியுறுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக்கொண்டதுடன்,

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் உள்நோயாளிகளிடம் சிகிச்சைகள் நல்லமுறையில் அளிக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் நோயாளிகளிடம் நேரடியாக விசாரித்தறிந்தார். அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதியையும் பார்வையிட்டு அவற்றை நல்லமுறையில் பராமரிக்க வேண்டியதின் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். மாணவர்களுக்கு தொற்றுநோய்கள் பரவாமல் இருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மருத்துவர்களிடமும், மாணவர்களிடமும் கலந்து ஆலோசித்தார்.

மருத்துவக் கல்வி இயக்குநர், முதல்வர் சென்னை மருத்துவக்கல்லூரி மற்றும் முதல்வர் ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி ஆகியோரும் உடனிருந்தனர்.

*************

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.9**